# Management Games - 2015 at Bharathidasan University, Trichy

**Organiser: Dr. M. SELVAM**

**Dinamalar, Tiruchirappalli Edition, Dated: 23.02.2015, Page No.: 09**

## சவால்களை சந்திக்க வலியுறுத்தல்

திருச்சி, பிப். 23-

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக வணிகவியல் மற்றும் நிதிக் கல்வியியல் துறை சார்பில் மேலாண்மை போட்டிகள் நடந்தன.

போட்டிகளை பல்கலைக்கழக பொருளியல் துறை மூத்த பேராசிரியர் அய்யம்பிள்ளை துவக்கி வைத்தார். சிண்டிகேட் உறுப்பினர் மங்களேஸ்வரன் மற்றும் நாலந்தா மேலாண்மை பள்ளி இயக்குனர் மலர் மன்னன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

பல்கலைக்கழக வணிகவியல் துறைத் தலைவர் செல்வம் பேசுகையில், எம்.பி.ஏ மாணவர்களுடைய தனித்திறன் மற்றும் புதிய கருத்துக்களை வெளிக் கொண்டுவருவதற்காகவும், பல்வேறு கல்லூரி மாணவர்கள் தங்களது மேலாண்மை குறித்த அறிவை பிறரிடம் பகிர்ந்து கொள்வதற்குரிய ஒரு மேடை வழங்கப்பட வேண்டும். இந்த போட்டிகள் அந்த வாய்ப்பை மாணவர்களுக்கு வழங்கும் என்றார்.

மேலாண்மை சார்ந்த தலைப்புகளில் மேலாண்மை வினாடி -வினா, சிறந்த மேலாளர், விளம்பரங்களை உருவாக்குதல், வணிக நிறுவன காட்சி அமைப்பு மற்றும் பல் திறன் போட்டிகள் என்ற ஐந்து விதமான போட்டிகள் நடத்தப்பட்டன.

போட்டி இறுதியில் ஒட்டுமொத்த சாம்பியன் பரிசை ஒரத்தநாடு உறுப்புக் கல்லூரி மாணவர்கள் தட்டிச் சென்றனர். சிறந்த மேலாளர் போட்டியில் பெரம்பலூர் உறுப்புக் கல்லூரியும், வினாடி-வினா போட்டியில் ஸ்ரீரங்கம் உறுப்புக் கல்லூரியும் வென்றன.

நிறைவு விழாவில் ஸ்மார்ட் மேலாண்மை கல்வி இதழின் உதவி ஆசிரியரும், கும்பகோணம் அன்னை கல்லூரியின் ஆலோசகருமான பேராசிரியர் மோகன் ஞான ஒளிவு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி பேசுகையில், இதுபோன்ற மேலாண்மை போட்டிகள் மேலாண்மை பாடங்களை பல்வேறு வணிக சூழல்கள் மூலம் திறம்பட விளக்குவதற்காக நடத்தப்படுகின்றன. இதன் மூலம் புதிய சவால்களை சந்திக்கும் திறமைகளையும், போட்டி மற்றும் பகுத்துணர்தல், குழு மனப்பான்மை மற்றும் எந்த சூழலையும் தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்ளும் திறனையும், நேர மேலாண்மை திறனையும், தகவல் மற்றும் தலைமை பண்புகளையும் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.